Reg. No. 1-M.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

I-A வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

SUPPLEMENT TO PART I-A OF THE FORT ST. GEORGE GAZETTE.

AUGUST 19, 1930.

ந. 33.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1930-ம் வருஷம் ஆகஸ்ட் மீ 19௳. [PRICE, 6 *pies*.

கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

லோகல் ஸெல்ப் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் வருஷம் ஜுன் மீ 25௳ (பி. எச். 1572-ம் ந. கவர்ன்மெண்ட் உத்தரவு).

சென்னை ராஜதானிப்பட்டணத்துக்கு வெளியே செலாவணியாய்க்கொண்டிருக்கும் ப்ளேக் (மஹாமாரி) ரெகுலேஷன்கள்.

ந. 1227.—ப்ளேக் என்னும் அபாயகரமான வியாதி சென்னை ராஜதானியைச் சேர்ந்த சில பாகங்களில் கண்டிருக்கிறதாகவும், இதர பாகங்களில் காணுமென்று அச்சம் கொள்ளப்படுகிறதாகவும் மந்திரிமார்களுடன் சேர்ந்து பிரவர்த்திக்கும் கவர்னரவர்கள் திருப்திகரமாய்த் தெரிந்துகொண்டிருக்கிறபடியாலும்,

ஷை ராஜதானியிலே தற்காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் சட்டத்தின் சாதாரண நிபந்தனைகள் ஷை வியாதி உண்டாவதையோ அல்லது அது பரவுவதையோ தடுப்பதற்குப் போதாமையாயிருக்கிறபடியாலும்,

(1920-ம் வருஷத்து 38-வது ஆக்டாகிய) (அதிகாரங்களை) ஒப்புவிப்பதைக் குறித்த 1920-ம் வருஷத்து ஆக்டினால் திருத்தப்பட்டபடிக்குள்ள (1897-ம் வருஷத்து 3-வது ஆக்டாகிய) பெருவாரி வியாதிகளைக் குறித்த 1897-ம் வருஷத்து ஆக்ட் 2-A பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, மந்திரிமார்களுடன் சேர்ந்து பிரவர்த்திக்கும் கவர்னரவர்கள் - இது விஷயமாய் முன்னமே பிறப்பிக்கப்பட்டிருக்கும் சகல ரெகுலேஷன்களையும் ரத்துசெய்து அவைகளுக்குப் பர்த்தியாக, இந்த ராஜதானியில் சென்னை ராஜதானிப் பட்டணம் தவிர மற்ற எல்லா பாகங்களிலும் 1930-ம் வருஷம் ஜுலை மீ 15௳ முதல் ஒரு வருஷ காலத்துக்கு அனுசரிக்கும்படியாக அடியிற்கண்ட அங்காமியான ரெகுலேஷன்களை இதனால் களிகூர்ந்து நிர்ணயிக்கிறார்கள்:—

1. இந்த ரெகுலேஷன்களிலே—

(1) ‘கலெக்டர்’ என்பது பிரஸ்தாப ஜில்லாவின் கலெக்டர் என்று அர்த்தமாகும்.

(2) ‘தொத்துவியாதி சம்பந்தப்பட்ட விஸ்தீர்ணம்’ என்பது - ப்ளேக் என்னும் தொத்துவியாதி சம்பந்தப்பட்டிருப்பதாக இந்த ரெகுலேஷன்களின்படி பிரதேச கவர்ன்மென்டாராலாவது, அவர்களுடைய அதிகாரத்துக்குட்பட்டுக் கலெக்டராலாவது பிரசித்தம் செய்யப்படுகிற யாதொரு விஸ்தீர்ணம் என்று அர்த்தமாகும்.

(3) ‘பிரதேச அதிகாரி’ என்பது—

(i) மியுனிஸிபல் விஸ்தீர்ணங்கள் விஷயத்தில்,

(a) மியுனிஸிபல் ஹெல்த் ஆபிஸர் (சுகாதார உத்தியோகஸ்தர்) என்றும், அப்படிப்பட்ட ஆபிஸர் எவரும் நியமிக்கப்படாமலிருந்தாலும் அவர் இராமலிருந்தாலும் பிரதேச கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட பிரதேச மெடிகல் ஆபிஸர் (வைத்திய உத்தியோகஸ்தர்) என்றும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி அப்படிப்பட்ட ஆபிஸர்களில் எவரும் நியமிக்கப்படாம

விருந்தாலும் அவர்கள் இருவரும் இராமலிருந்தாலும் பிரதேச மெடிகல் ஆபிஸர் இராமலிருந்தாலும் மியுனிஸிபல் மெடிகல் ஆபிஸர் என்றும்,

(b) மியுனிஸிபல் கௌன்ஸிலின் அக்கிராசனாதிபதி என்றும்,

(ii) மியுனிஸிபல் விஸ்தீர்ணங்களல்லாத இதர விஸ்தீர்ணங்களின் விஷயத்தில்,

(a) பிரதேச கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட பிரதேச மெடிகல் ஆபிஸர் என்றும், அப்படிப்பட்ட ஆபிஸர் எவரும் நியமிக்கப்படாமலிருந்தாலும் அவர் இராமலிருந்தாலும் லோகல் போர்டாரால் நியமிக்கப்பட்ட பிரதேச மெடிகல் ஆபிஸர் என்றும்,

(b) கிராமப் பெரியதனக்காரர் என்றும்

அர்த்தமாகும்; மேலும் இந்த சொற்றொடரில், மேலேகண்ட இரண்டு விஷயங்களிலும் கலெக்டரால் பிரதேச அதிகாரியாக நியமிக்கப்பட்ட வேறே யாதொரு நபர் என்பதும் அடங்கும்.

(4) 'பிரதேச கவர்ன்மென்டார்' என்பது மந்திரிமார்களுடன் சேர்ந்து பிரவர்த்திக்கும் கவர்னரவர்கள் என்று அர்த்தமாகும்.

(5) 'ப்ளேக் ஆபிஸர்' என்பது முறையே தத்தம் அதிகாரவரம்புக்குள் டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸர் என்றும் மியுனிஸிபல் ஹெல்த் ஆபிஸர் என்றும் ரெவினியு டிவிஷன் ஆபிஸர் என்றும் அர்த்தமாவதுமல்லாமல், அதில் யாதொரு விஸ்தீர்ணத்தின் விஷயத்திலே அப்படிப்பட்ட விஸ்தீர்ணத்துக்கு ப்ளேக் ஆபிஸராகப் பிரதேச கவர்ன்மென்டாரால் அல்லது கலெக்டரால் நியமிக்கப்படக்கூடிய வேறே யாதொரு நபரென்பதும் அடங்கும்.

2. எவ்விடத்தில் ப்ளேக் உற்பத்தியாகி ஒருவருக்காவது பலருக்காவது கண்டிருக்கிறதோ அல்லது எவ்விடத்தில் எலிகளுக்குள் ப்ளேக் கண்டிருப்பதாக ருஜுவாயிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு இடத்தையாவது விஸ்தீர்ணத்தையாவது பிரதேச கவர்ன்மென்டார் - போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பர மூலமாய், ப்ளேக் சம்பந்தப்பட்டிருப்பதாக நிர்ணயிக்கலாம். அதே மாதிரியான சந்தர்ப்பங்களில், கலெக்டரானவர் - தம்முடைய ஜில்லாவில் யாதொரு இடம் அல்லது விஸ்தீர்ணமானது ப்ளேக் சம்பந்தப்பட்டிருக்கிறதென்று தண்டோரா மூலமாகவும் ஜில்லா கெஜெட்டில் பிரசுரம் செய்தும் பிரசித்தம் செய்யலாம்; மேலும், அந்தப்படி பிரசித்தம் செய்திருக்கும் சங்கதியை உடனே அவர் பிரதேச கவர்ன்மென்டாருக்குத் தெரிவிக்க வேண்டும்; அதன்மேல் பிரதேச கவர்ன்மென்டார் அந்த விளம்பரத்தை ரத்துசெய்யலாம் அல்லது மாற்றலாம்.

3. கலெக்டரானவர்—

(a) தொத்துவியாதி சம்பந்தப்பட்ட யாயாதொரு விஸ்தீர்ணத்திலாவது,

(b) தொத்துவியாதி சம்பந்தப்பட்ட யாதொரு விஸ்தீர்ணம் தமது ஜில்லாவிலிருந்தாலுஞ்சரி அடுத்த ஒரு ஜில்லாவிலிருந்தாலுஞ்சரி அப்படிப்பட்ட விஸ்தீர்ணத்துக்கு அடுத்தும் தமது ஜில்லாவிலுமுள்ள யாதொரு விஸ்தீர்ணத்திலாவது

எற்கனவேயிருக்கும் யாதொரு மார்க்கெட்டை மூடிவிடலாம்; மேலும், அவர் - மார்க்கெட்டுகளை வைப்பதற்காகப் பிரத்தியேகமான இடங்களை ஏற்படுத்துவதுமல்லாமல், தொத்துவியாதி சம்பந்தப்பட்ட யாதொரு விஸ்தீர்ணத்திலிருந்தாவது அப்படிப்பட்ட விஸ்தீர்ணத்துக்காவது விற்பனைக்காகச் சாமான்களைக்கொண்டுவரும் நபர்கள் இன்ன எல்லைகளைத்தாண்டிப்போவது சட்டசம்மதமாகாதென்றும் நிர்ணயிக்கலாம்.

4. தொத்துவியாதி சம்பந்தப்பட்ட யாதொரு விஸ்தீர்ணத்திலே, கலெக்டராகிலும் கலெக்டருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு யாதொரு ப்ளேக் ஆபிஸராகிலும் - தொத்துவியாதி சம்பந்தப்பட்ட வளவுகளையும் அவைகளுக்கு அருகாமையிலிருக்கும் வளவுகளையுமாவது, பொதுவாய்த் தொத்துவியாதி சம்பந்தப்பட்ட விஸ்தீர்ணத்தையாவது அதன் யாதொரு பாகத்தையாவது காலிபண்ணும்படி உத்தரவு செய்யலாம்:

ஆனால், காலிசெய்யும்படி கட்டாயப்படுத்துவதற்கான உத்தரவைப் பிறப்பிப்பதற்காவது பிறப்பிக்க அனுமதி கொடுப்பதற்காவது முன்பாகக் கலெக்டரானவர்—

(a) சீதோஷ்ண நிலைமையைக் கவனிக்கும்போது, அந்த வியாதி பின்னும் பரவாமல் தடுப்பதற்கு காலிசெய்யும்படி கட்டாயப்படுத்துவது அவசியமென்றாகிலும் அந்தப்படி கட்டாயப்படுத்துவது பாதிக்கப்பட்ட ஜனங்களுக்கு நன்மை செய்வதாகுமென்றாகிலும் திருப்திகரமாகத் தெரிந்துகொள்ளவேண்டும்;

(b) காலிசெய்து வெளியே அனுப்பப்பட்ட ஜனங்களுக்கு நியாயமான தூரத்துக்குள் தங்குவதற்குத் தகுந்ததாயும் போதுமானதாயுமுள்ள இடத்தையும் அவசியமான ஜலசர்ப்பராவையுங்கூட ஏற்படுத்திக்கொடுக்கவாகிலும், அப்படி தங்குவதற்கு இடமும் ஜல சர்ப்பராவும் ஸர்க்கார் சம்பந்தமில்லாத தனி நபர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்று திருப்திகரமாகத் தெரிந்துகொள்ளவாகிலும் வேண்டும்; மேலும்,

(c) காவலுக்கும் பாதுகாப்புக்கும் அவசியமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

தாங்களாகவே தங்களுடைய வளவுகளைக் காலிசெய்கிற அல்லது இந்த ரெகுலேஷன் பிரகாரம் காலிசெய்யும்படி கட்டாயப்படுத்தி எவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட சகல நபர்களுக்கும், கலெக்டரானவர் தாம் ஏற்படுத்தும் யாதொரு இடத்தில் தாம் நிர்ணயிக்கும் யாதொரு காலத்துக்கு வசிக்கும்படி உத்தரவு செய்யலாம்.

யாதொரு பிரதேசத்தைத் தொத்துவியாதி சம்பந்தப்பட்ட விஸ்தீர்ணமாக நிர்ணயித்து விளம்பரம் பிரசுரிப்பதற்கு அடுத்து முந்திய ஆறுமாத காலத்துக்குள், ப்ளேக் வாராதிருக்கும் பொருட்டுச் சித்திகரமாய் ப்ளேக் மருந்து குத்தப்பெற்றிருப்பதாக ரெஜிஸ்டர் செய்யப்பட்ட யாதொரு வைத்தியாப்பியாசியினிடமிருந்து ஸெர்டிபிகேட் ஹாஜர் செய்கிற நபர்களுக்காவது, அப்படிப்பட்ட விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதிலிருந்து 24 மணி நேரத்துக்குள் தாங்

களாகவே ப்ளேக் மருந்து குத்திக்கொண்டு அந்தப்படி குத்திக்கொண்டதாக ரெஜிஸ்டர் செய்யப்பட்ட யாதொரு வைத்தியாப்பியாசியினிடமிருந்து ஸெர்டிபிகேட் ஹாஜர் செய்கிற நபர்களுக்காவது இந்த ரெகுலேஷனில் கண்டதெதுவும் பிரயோகப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

5. தொத்துவியாதி சம்பந்தப்பட்ட யாதொரு விஸ்தீர்ணத்திலே, ப்ளேக் ஏற்பாடுகளுக்குச் சம்பந்தமான எவையேனும் காரியங்களுக்காக யாதொரு கட்டிடம் அல்லது இடம் வேண்டியிருந்து, அந்தக் காரியங்களுக்கு அது தகுதியானதென்று ஹெல்த் ஆபிஸர் ஏற்பட்டிருக்கும் மியுனிஸிபாலிடிகளின் விஷயத்தில் மியுனிஸிபல் ஹெல்த் ஆபிஸரும் மற்ற எல்லா விஷயங்களிலும் டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸர் அல்லது டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபிஸர் இராமலிருந்தால் டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபிஸரும் அபிப்பிராயப்பட்டால், அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது இடத்தில் கலெக்டரானவர் - 1894-ம் ௵த்து நிலம் எடுத்துக்கொள்வதற்கான ஆக்டில் கண்ட நிபந்தனைகளை அனுசரிக்காமலே பிரவேசித்து, அதைத் தம் வசப்படுத்திக்கொண்டு உபயோகித்துக்கொள்ளலாம், அல்லது அவ்விதம் பிரவேசித்துத் தம் வசப்படுத்திக்கொண்டு உபயோகித்துக்கொள்ளும்படி யாதொரு நபரை நியமித்தனுப்பலாம் ; ஆனால், அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது இடம் எவருடைய அனுபோகத்திலாகிலும் இருந்தால், அந்த அனுபோகதாரருக்கு எழுத்துமூலமாய் 24 மணிநேர நோடிஸ் கொடுக்கவேண்டும், அல்லது அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது இடத்தில் நன்றாய்த் தெரியும்படியாக அதை ஒட்டவேண்டும். அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது இடத்தின் சொந்தக்காரராவது குத்தகைதாரராவது - அந்தக் கட்டிடம் அல்லது இடம் எவ்வளவு காலத்துக்கு அனுபோகத்தில் வைத்துக்கொள்ளப்படுகிறதோ அல்லது உபயோகிக்கப்படுகிறதோ அவ்வளவு காலத்துக்குக் கலெக்டரால் நிர்ணயிக்கப்படும் நியாயமான வாடகையைப் பெற அர்ஹராவார் ; மேலும், கலெக்டரானவர் - யாதொரு கட்டிடம் மேலே கண்டபடி அனுபோகத்தில் வைத்துக்கொள்ளப்படுவது அல்லது உபயோகிக்கப்படுவது நின்றுவிடும்போது, அதைப் பூர்த்தியாக சுத்தம் செய்யும்படியும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கும்படியும் செய்வதுமல்லாமல், சொந்தக்காரர் விரும்பும்பட்சத்தில் அதன் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் சுண்ணாம்பு அடிக்கும்படியும் செய்யவேண்டும்.

6. ப்ளேக் பரவுவதைத் தடுப்பதற்காக யாதொரு குடிசை அல்லது கொட்டகையை அழித்துவிடுவது அவசியமென்று கலெக்டராவது யாதொரு ப்ளேக் ஆபிஸராவது அபிப்பிராயப்பட்டால், அவர் அந்தக் குடிசை அல்லது கொட்டகையையும் அது எவைகளினால் அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த சாமான்களையும் அழித்துவிடுவதற்காக சுருக்கவகையான ஏற்பாடுகள் செய்யலாம்.

7. கலெக்டராவது அவரால் இது விஷயமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு நபராவது - யாதொரு கட்டிடம் அல்லது இடத்தைப் பார்வையிடும்படியும் அதில் காணப்படும் எலிகளையெல்லாம் அழித்துவிடும்படியும் கட்டளையிடலாம் ; மேலும், அவர் - அந்தப்படி அழிக்கும் காரியத்தைச் சுலபமாக்குவதற்காக, அந்த வளவிலுள்ள எந்த சாமானையாகிலும் சிறிது காலத்துக்கு அப்புறப்படுத்தும்படி உத்தரவு செய்யலாம்.

8. கலெக்டரானவர் - ரெயில் மார்க்கமாகவாவது ரஸ்தா மார்க்கமாகவாவது வேறே விதமாகவாவது கொண்டுபோகப்படும் யாதொரு தானியம் அல்லது இதர உற்பத்திப்பொருள் அல்லது வியாபார வஸ்துக்கள் அடங்கிய ஒப்படையைத் தம்முடைய ஜில்லாவில் எந்த இடத்திலாகிலும் பரிசோதிக்கும்படியும், அவசியமானால் அதை இறக்கித் தாம் நிஷ்கரிஷை செய்யக்கூடிய மாதிரியாகவும் காலத்துக்கும் வெயிலில் போட்டுவைக்கும்படியும் கட்டளையிடலாம்.

9. யாதொரு கட்டிடத்தின் ஒவ்வொரு சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரும் ஒவ்வொரு வைத்தியாப்பியாசியும் - எவருக்காவது ப்ளேக் கண்டிருப்பதாகவாகிலும், தசிரகோளங்களில் வீக்கத்தோடு கூடிய சுரம் கண்டிருப்பதாகவாகிலும், எலிகளுக்குள் அசாதாரணமான மரணம் நேரிட்டிருப்பதாகவாகிலும் தமக்குத் தெரியவரும்பட்சத்தில், அந்த விஷயத்தைக் குறித்து அதிசமீபத்திலுள்ள பிரதேச அதிகாரிக்கு உடனே தெரிவிக்கவேண்டும்.

10. யாதொரு மியுனிஸிபல் விஸ்தீர்ணத்தின் விஷயத்தில் அந்த மியுனிஸிபல் கௌன்ஸிலின் அக்கிராசனாதிபதியும், யாதொரு யூனியன் விஸ்தீர்ணத்தின் விஷயத்தில் அந்த யூனியன் போர்டின் ப்ரெஸிடென்டும், யாதொரு பஞ்சாயத்து விஸ்தீர்ணத்தின் விஷயத்தில் அந்தக் கிராமப் பஞ்சாயத்தின் ப்ரெஸிடென்டும், இதர விஷயங்களில் கிராமப் பெரியதனக்காரரும், எல்லா விஷயங்களிலும் கலெக்டரால் இது விஷயமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபரும் - தொத்துவியாதி சம்பந்தப்பட்ட விஸ்தீர்ணத்திலிருந்து வருகிறதாக சந்தேகிக்கப்படும் எவையேனும் சாமான்களை, அந்த சாமான்கள் மூன்று மணிநேரத்துக்குக் குறையாமல் நேரில் சூரிய வெப்பத்தில் இருக்கும்படியாக போட்டுவைக்கப்பட்டிருந்தால் அல்லது அப்படிப்பட்ட உத்தியோகஸ்தருக்குத் திருப்திகரமாய் அவைகளிலிருந்து தொத்துவியாதி சம்பந்தம் நீக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி சம்பந்தப்பட்ட பிரதேச விஸ்தீர்ணத்துக்குள் கொண்டுவர அல்லது கொண்டுபோகக்கூடாதென்று தடுக்கலாம். மேலும், தொத்துவியாதி சம்பந்தப்பட்ட யாதொரு விஸ்தீர்ணத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோகப்படும் எவையேனும் சாமான்களை வெயிலில் போட்டுவைப்பது விஷயமாகவாவது அவைகளிலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கும் விஷயமாகவாவது அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் அதே மாதிரியான அதிகாரங்களைச் செலுத்தலாம்.

11. (1) யாதொரு ப்ளேக் ஆபிஸராவது பப்ளிக் ஹெல்த் இலாகாவைச் சேர்ந்தவராய் ஹெல்த் இன்ஸ்பெக்டர் அல்லது ஸானிடரி இன்ஸ்பெக்டரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ள வேறே யாதொரு உத்தியோகஸ்தராவது - எந்த வளவில் ப்ளேக் கண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறதோ அல்லது

ப்ளேக் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட யாதொரு வளவைத் தமக்கு நியாயமாகத் தோற்றக்கூடிய நோடிஸ் கொடுத்த பிறகு பகலிலாகிலும் இரவிலாகிலும் எந்த நேரத்திலும் பார்வையிடலாம்.

(2) தொத்துவியாதி சம்பந்தம் இன்னும் வெகுசாய் இருக்கக்கூடிய யாதொரு வளவையாவது அதன் யாதொரு பாகத்தையாவது அதிலுள்ள யாதொரு சாமானையாவது சுத்தம் செய்வதனாலோ அதிலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவதனாலோ ஷை தொத்துவியாதி சம்பந்தம் பரவுவதைத் தடுக்கக்கூடும் அல்லது நிறுத்தக்கூடுமென்று அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்பட்டால், அவர் - அந்த வளவு, பாகம் அல்லது சாமானைச் சுத்தம் செய்யலாம் அல்லது அதிலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கலாம்; மேலும், அவர் - அப்படிப்பட்ட வளவு அல்லது அதன் யாதொரு பாகத்தின் அனுபோகதாரருக்கு நோடிஸ் கொடுத்து அதன் மூலமாய் ஷை நோடிஸில் நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்துக்கு அந்த வளவு அல்லது பாகத்தைக் காலி செய்யும்படி கேட்கலாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பகுதியின்படி யாதொரு வளவையாவது அதன் பாகத்தையாவது அதிலுள்ள யாதொரு சாமானையாவது சுத்தம் செய்வதற்கான அல்லது அதிலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவதற்கான செலவு முழுவதையும் கவர்ன்மெண்டாரே செய்யவேண்டும்.

(4) அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் - தொத்துவியாதி சம்பந்தம் இன்னும் வெகுசாய் இருக்கக்கூடிய படுக்கை, உடுப்பு அல்லது இதர சாமான்களை அழித்துவிடும்படி கட்டளையிடலாம்.

12. (1) ப்ளேக் சம்பந்தமாய் வேலை செய்வதற்காக அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கிற பிரதி இன்ஸ்பெக்டர், மேஸ்திரி, சேவகன், காவற்காரன், கூலியாள், குப்பைக்காரன் அல்லது குற்றேவல் செய்யும் இதர ஊழியக்காரனும் - அடியில் கண்டதற்கு மாறாக எழுத்துமூலமாய் உடன்படிக்கை ஏற்பட்டிராதபட்சத்தில், துர்நடத்தைக்காக வேலையிலிருந்து அனுப்பிவிடப்பட்டாலும் குறித்த ஒரு கால அளவுக்கு அமர்த்திக்கொள்ளப்பட்டிருந்து அந்தக் கால அளவு முடிந்த பிறகு வேலையிலிருந்து அனுப்பிவிடப்பட்டாலுமன்றி மற்றப்படி, வேலையிலிருந்து அவர்களை அனுப்பிவிடுவதற்கு முன்னே ஒரு மாத நோடிஸாகிலும் அதற்குப் பர்த்தியாக ஒரு மாதச் சம்பளமாகிலும் பெற்றுக்கொள்ள அர்ஹராவார்.

(2) அப்படிப்பட்ட இன்ஸ்பெக்டராவது மேஸ்திரியாவது சேவகனாவது காவற்காரனாவது கூலியாளாவது குப்பைக்காரனாவது குற்றேவல் செய்யும் இதர ஊழியக்காரனாவது - அடியிற்கண்டபடி செய்ய தனக்கு அனுமதி கொடுப்பதாக எழுத்துமூலமான உடன்படிக்கை ஏற்பட்டிராமலும் நியாயமான காரணமில்லாமலும், ஒரு மாத நோடிஸ் கொடாமலே தன்னுடைய உத்தியோகத்தை ராஜிநாமா கொடுக்கவுங்கூடாது, தன்னுடைய அலுவல்களைச் செய்யாமல் நின்றுபோகவுங்கூடாது, தன்னுடைய அலுவல்களில் எதையும் செய்ய அசட்டை பண்ணவுங்கூடாது நிராகரிக்கவுங்கூடாது.

(3) கலெக்டரானவர் - தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற திட்டங்களுக்குட்பட்டுக் கூலியாள்களையாவது குற்றேவல் செய்யும் இதர ஊழியக்காரர்களையாவது சர்ப்பரா செய்பவர்களாக அப்போதைக்கப்போது சில நபர்களை நியமிக்கலாம்; மேலும், அப்படி சர்ப்பரா செய்யும் ஒவ்வொருவரும் - கலெக்டரால் தமக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட அலுவல்களை உண்மையாய்ச் செய்யவும், தாம் எந்தத் திட்டங்களின்படி நியமிக்கப்பட்டிருக்கிறாரோ அந்தத் திட்டங்களை அனுசரிக்கவும் கடமைப்பட்டவராவார்.

13. இந்த ரெகுலேஷன்களினாலாவது அவைகளின்படியாவது கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைச் செலுத்துவது காரணமாக யாதொரு சொத்து சேதப்பட்டாலும் அல்லது அழிக்கப்பட்டாலும், கலெக்டரானவர் - சேதத்தைச் சீர்படுத்தவாகிலும், அழிக்கப்பட்ட சொத்தைப் பர்த்திசெய்யவாகிலும் பிடிக்கும் செலவுக்குப் போதுமானதென்று தாம் கருதக்கூடிய ஒரு தொகையைப் பிரதிபலனாக சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டும். இவ்வளவு தொகை பிரதிபலனாக கொடுக்கவேண்டுமென்று நிச்சயித்துக் கலெக்டர் செய்யும் தீர்மானம் முடிவானதாகும். ஆயினும், 11 (4) ரெகுலேஷன்படி அழித்துவிடப்பட்ட சாமான்களுக்குப் பதிலாக வேறு சாமான்களை சர்ப்பரா செய்வதற்கான செலவுக்காகப் பிரதிபலன் தொகை எதுவும் செலுத்தத்தக்கதாகாது.

குறிப்பு.—(1) ப்ளேக் ரெகுலேஷன்களானவை பெருவாரி வியாதிகளைக் குறித்த ஆக்டின்படி கவர்ன்மெண்டார் முறைமையாய்ச் செய்து பிறப்பிக்கும் உத்தரவுகளாயிருக்கிறபடியால், அவைகளின்படி நடவாதவர்மேல் பிராது தொடருவதற்காக முன்னதாய் எவ்வித அனுமதியும் பெறவேண்டுமென்னும் அவசியமில்லை (1899-ம் ௵த்து 561-ம் ந. க்ரிமினல் அப்பீலில் ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்பு).

(2) 1898-ம் ௵ நவம்பர் ௴ 18௳ பிறந்த 687-ம் ந. கம்மாண்ட் ஆர்டரினால், மதராஸ் கம்மாண்டிலுள்ள சகல ராங்குகளும் ப்ளேக் ரெகுலேஷன்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்று உத்தரவாயிருக்கிறது; ஆகவே, அந்த ரெகுலேஷன்களை எவ்விதத்திலாகிலும் மீறி நடந்தால், அது இராணுவ சம்பந்தமான குற்றத்தைப்போல் தண்டிக்கப்படத்தக்கதாகும். இராணுவ பென்ஷனர்கள் எவ்விதமாயாவது இந்த ரெகுலேஷன்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்காவிட்டாலும் அவைகளை வேண்டுமென்று அசட்டை செய்தாலும் அல்லது ப்ளேக் சம்பந்தமான அலுவலைச் செய்துகொண்டிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தருக்குத் தடை உண்டாக்கினாலும், அதனால் தங்களுடைய பென்ஷன்களை வாங்கிக்கொண்டேயிருப்பதற்குக் கவர்ன்மெண்டாரால் அவசியமான திட்டமாக எண்ணப்படுகிற நன்னடக்கைக்குப் பாதகம் உண்டாவதாகக் கருதப்படுமென்றும், யாதொரு பென்ஷனர் அப்படிப்பட்ட குற்றம் செய்தால் அவர் தம்முடைய பென்ஷன் உடனே நிறுத்தப்படுவதற்கும், அது குறைக்கப்படுவதற்கும் அல்லது நிலையாக நிறுத்திவிடப்படுவதற்கும் உள்ளாரென்றும் ஷை பென்ஷனர்களுக்கு (1898-ம் ௵ டிஸெம்பர் ௴ 14௳ பிறந்த ஸூபரின்டெண்டென்டின் 2-ம் ௺. சுற்று உத்தரவில்) எச்சரிக்கை செய்திருக்கிறது.

எ. டி. க்ராம்பி,
கவர்ன்மெண்ட் டெப்யுடி ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.